1969 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்].

கவன ஈர்ப்பு

(அ) இராமநாதபுரம் பெரிய கண்மாயை தூர்வாரி மராமத்து செய்தல்.

திரு. தங்கப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் தாலுக்கா பெரிய கண்மாய் தூர்ந்துபோய் வேளாண்மைக்குத் தண்ணீர்ப் பற்றுக்குறை ஏற்பட்டு பயிர்கள் சாவியாகி விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாவதால், அக்கண்மாயைத் தூர்வாரி மராமத்து செய்யவேண்டிய அவசிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா. : இராமநாதபுரம் பெரிய கண்மாயைத் தூர் வாரிப் புனரமைக்கும் திட்டத்திற்கான மதிப்பீடும், வரை படங்களும் ரூபாய் பதினெரு லட்சத்து ஐம்பதாயிரத்திற்குத் தயாரிக்கப்பட்டு பொதுப்பணித் துறையினரின் பரிசீலனையிலுள்ளது. இது அரசுக்கு எட்டியதும் அது ஆலோசிக்கப் பெறும்.

திரு. டி. தங்கப்பன்: தலைவர் அவர்களே, அவசியத்தை முன்னிட்டு இந்த ஆண்டிலேயே அந்தக் கண்மாய் வேலைகளைத் துவக்க அரசு அங்கீகாரம் கொடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டது போல் அவசர அவசியத்தை முன்னிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நில அடைமான வங்கிகள் மூலம் கடன் வழங்கப்படாமை.

திரு. ஏ. அ. சுப்பராஜா: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் கூட்டுறவு நில அடைமான வங்கியின் மூலமாக ஒப்பளிக்கப்பட்டும் அதற்குண்டான தொகைகளை இதுவரை பட்டுவாடா செய்யாததைப் பற்றிய அவசர அவசியப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் 1—4—1968 முதல் 15—2—1969 வரை நில அடைமான வங்கிகள் மூலமாக வழங்கப்படுவதற்கென ஒப்பளிக்கப்பட்ட நீண்ட காலக் கடன் தொகை ரூ. 122·43 இலட்சமாகும். இதையொட்டி 28—2—1969 வரை வழங்கப்பெற்ற கடன் தொகை ரூ. 72·59 இலட்சமாகும். அந்தத் தேதியில் வழங்கப் பெறுமல் இருந்த கடன்கள் தொகை ரூ. 49·85 இலட்சமாகும். இந்தத் தொகையினை நில அடைமான வங்கிகள் 31—3—1969-ம் தேதிக்குள் வழங்கிவிடும்.